**நிகழும் திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் 2018-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ம் தேதி பங்குனி மாதம் 23-ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

பொருள் 1

வால்பாறை நகராட்சி பகுதியில் இருந்து வரும் கீழ்கண்டுள்ள தனியார் சாலைகள் வருவாய் வட்டாட்சியரிடம் இருந்து நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு நகராட்சி மூலம் சாலை அமைக்கப்பட்டு மேற்படி சாலையாவும் மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது அவ்வாறு அமைக்கப்பட்ட சாலையின் அகலம் 3.60 மீட்டர் அகலம் மட்டுமே கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அச்சாலை வழியாக பள்ளி பேருந்துகள், கனரக வாகனம் மற்றும் இருசக்கர வாகனம் செல்லும் போது அச்சாலை வழியாக பேருந்து செல்லும் போது எதிரே வரும் பேருந்துக்கு வழிவிட இயலாத சூழ்நிலை உள்ளதால் சாலையின் ஒரு புறம் 0.75 மீட்டர் அகலத்திற்கு கான்கிரீட் வடிகால் தளம் அமைத்தும் சில இடங்களில் தடுப்புச் சுவர்கள் அமைத்தால் தான் மழை காலங்களில் போக்குவரத்து செல்ல ஏதுவாக இருக்கும் இச்சாலைகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடுகளுக்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வால்பாறை பன்னிமேடு பேக்டரி டிவிசன் முதல் பன்னிமேடு முதல் பிரிவு வரை உள்ள சாலைக்கு ஒரு புறம் வடிகால் கான்கிரிட் தளம் அமைத்து சாலை ஓரம் பக்கவாட்டு சுவர் அமைத்தல் | 390.00 |
| 2 | வால்பாறை கருமலை முதல் அக்காமலை வரை உள்ள சாலைக்கு ஒருபுறம் வடிகால் கான்கிரிட் தளம் அமைத்து சாலை ஓரம் பக்கவாட்டு சுவர் அமைத்தல் | 175.00 |
| 3 | வால்பாறை ஆணைமுடி எஸ்டேட் 3-வது பிரிவு முதல் ஹைபாரஸ்ட் வரை, முக்கேட்டுமுடி 2-வது பிரிவு முதல் பன்னிமேடு எஸ்டேட் மற்றும் முக்கோட்டுமுடி 2-வது முதல் வாகமலை எஸ்டேட் வரை உள்ள சாலைகள் ஓரம் ஒருபுறம் கான்கிரிட் வடிகால் தளம் அமைத்து சாலை ஓரம் பக்கவாட்டு சுவர் அமைத்தல் | 175.00 |
| 4 | வால்பாறை கவர்க்கல்- தலநார் சக்தி எஸ்டேட் நகராட்சி சாலை ஓரம் வடிகால் கான்கிரிட் தளம் அமைத்தல் | 93.00 |

**அலுவலக குறிப்பு**

1 *மன்றம் அனுமதி வழங்கலாம்*

**நகரமன்ற தீர்மான எண். 001, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது**

பொருள் 2

வால்பாறை நகராட்சி சொந்தமான நகராட்சியியால் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்கண்டுள்ள சாலைகள் குன்டும் குழியாக உள்ளதால் பேருந்து செல்ல இயலாத நிலை உள்ளது இச்சாலைகளை புதுப்பித்து கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடுகளுக்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வால்பாறை காஞ்சமலை சாலைக்கு கான்கிரிட் தளம் அமைத்தல் | 110.00 |
| 2 | வால்பாறை புதிய பேருந்து நிலையம் முதல் ஸ்டான் மோர் கரும்பாலம் வரை உள்ள சாலைக்கு கான்கிரிட் தளம் அமைத்தல் | 60.00 |

**அலுவலக குறிப்பு**
1 *மன்றம் அனுமதி வழங்கலாம்*

**நகரமன்ற தீர்மான எண். 002, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள் 3

வால்பாறை நகராட்சி தற்போது கோவை மாவட்டத்தில் உள்ள சிறந்த சுற்றுலா தளமாக உள்ளதாலும் மக்கள் போக்குவரத்து மிகுந்தும் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் போக்குவரத்து மற்றும் கோடை விழா போன்ற விழா நிகழ்ச்சிகளை மற்ற மாவட்டங்களில் இருந்து வரும் பொது மக்கள் கண்டு களிக்க ஏதுவாக இந்நகரில் உள்ள சிறு மற்றும் பெரு வணிக நிறுவனங்கள் வளர்ச்சி அடையும் வகையிலும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் போக்குவரத்தினை மேம்படுத்தும் வகையிலும் புதிய பேருந்து நிலையம் அருகில் சமூதாயநலக் கூடம், நகராட்சி அண்ணா திடல் வளாகத்தில் வணிக வளாக கட்டிடம், நகராட்சி மார்க்கெட் பகுதியில் வணிக வளாக கட்டிடம் மற்றும் குடிநீர் அபவிருத்தி பணியான நகராட்சிக்கு சொந்தமான அக்காமலை செக்டேமினை சுற்றி தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. எனவே பட்டியலில் கண்டுள்ள கீழ்காணும் அபிவிருத்தி செய்யும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடுகளை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சமூதாயநலக் கூடம் கட்டுதல் | 300.00 |
| 2 | நகராட்சிக்கு சொந்தமான அக்காமலை செக்டேமினை சுற்றி சுற்றுச் சுவர் கட்டுதல் | 250.00 |
| 3 | நகராட்சி அண்ணா திடல் வளாகத்தில் வணிக வளாக கட்டிடம் கட்டுதல் | 450.00 |
| 4 | நகராட்சி மார்க்கெட் பகுதியில் வணிக வளாக கட்டிடம் கட்டுதல் | 450.00 |

**அலுவலக குறிப்பு**
1 *மன்றம் அனுமதி வழங்கலாம்*

**நகரமன்ற தீர்மான எண். 003, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள் 4

வால்பாறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டத்தில் தினசரி வழங்கப்படும் குடிநீரை குளோரின் கலந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு தேவையான திரவ குளோரின் தேவைக்கேற்ப பயன்படுத்தவும் மற்றும் குளோரின் அறையில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1 *மன்றம் அனுமதி வழங்கலாம்*
2 ந.க.எண்.471/2017/இ-1

**நகரமன்ற தீர்மான எண். 004, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள் : 5

பாரதப் பிரதமரின் தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-2017-ன் கீழ் வால்பாறை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான வாகனங்கள் வாங்கவும் மற்றும் உரக்கிடங்கில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் 12 எண்ணிக்கை பணிகள் ரூ.256.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25314/2016/பி-3 நாள் 22.11.2016 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மேற்கட்ட பணியில் உள்ளடக்கிய மின் உபகரனங்கள் வாங்க 21.00 இலட்சம் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட இனங்கள் தவிர மற்ற பணிகளான கட்டுமான பணிகள் மட்டும் செய்யும் வகையில் திருத்திய நிர்வாக அனுமதி ந.க.எண்.11088/2017/பி-3 நாள் 24.05.2017-ல் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் ரூ.235.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியதின் அடிப்படையில் **II Processing plant** வ.எண்.1 மற்றும் 3 பணிகளை ரத்து செய்து மேற்படி பணிக்கு பதிலாக உரக்கிடங்கில் புதிய சிறுஉர மையம் (MCC) அமைக்க ரூ.58.50 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன் மொழிவுகள் சமர்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| Sl.No | Name of work | Estimate Amount | Expen diture | Remarks |
|---|---|---|---|---|
| | I Primary Collection | | | |
| 1 | Supply and Errection of Light Moving Vehicle 2 Nos | 15.00 | 14.98 | Work Completed |
| | II Processing plant | | | |
| 1 | Machinery shed on existing platform | 20.00 | - | Alternate Decentralized Micro Compost Plant Proposal Submitted. |
| 2 | Supply and Errectilon of Machineries Manual Segregation Converyor (Bio-degradable shredder, conveyor, Plastic Shredding Machine, Sieving Machine with conveyors | 21.00 | - | Work Canceled |
| 3 | Compost pad with fully roofed (With Available Compost pad of 1800Sq.m) | 38.50 | - | Alternate Decentralized Micro Compost Plant Proposal Submitted. |
| | III Other Infrastructures | | | |
| 1 | Adminstrative Building | 5.00 | - | To be Started |
| 2 | Labour rest room | 8.00 | - | |
| 3 | Compound wall | 62.00 | - | Work Under Progress |
| 4 | Water supply arrangement | 9.00 | - | To be Started |
| 5 | Cycle shed | 5.00 | - | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | Lighting arrangement | 2.00 | - | |
| 7 | CC road 275m | 45.00 | - | |
| 8 | Retaining wall | 21.00 | - | |
| | IV- IEC Activities | 4.50 | - | |
| 1 | Construction of municipal Solid Waste processing Facilities including | | | Alternate DPR for MCC Proposal Submitted to get Revised Administration Sanction. |
| | i) Construction of Galvalune Sheet roof for Decentralised Micro Composting Centre at Compost Yard in valparai | 47.50 | | |
| | ii) Construction of Chemical Compost Cubical to the Decentralised Micro Composting Centre at Compost yard in valparai | 5.40 | | |
| | iii) Supply and Fixing of Conveyor Belt at Compost yard in valparai | 3.60 | | |
| | iv) Supply and Fixing of Shredder in Micro Composed Centre at Compost yard in Valparai | 2.00 | | |
| | TOTAL | 58.50 | | |

**அலுவலக குறிப்பு**

1 *மன்றம் அனுமதி வழங்கலாம்*

2 *கோப்பு எண்.205/2017/இ1*

**நகரமன்ற தீர்மான எண். 005, மன்றம் அனுமதி அளிக்கப்பட்டது**